'தவிச்ச முயல் அடிக்கும்' தந்திரோபாயம் இது!

உதயன்

ஆசிரியர் தலையங்கம்

'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும்' பொறுப் பற்ற போக்கில் இந்தியா செயற்படுகின்றது என்று விசனப்படு கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

தங்களது நியாயமான உரிமைகளுக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும், தமது தாயக மண்ணில் பாரம்பரிய பூமி யில் தமது இனத்தின் இருப்புக் காகவும் வாழ்வா, சாவா போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் தமிழர்கள்.

பாரத மாதாவைத் தமது பெரியன்னையாக வரித்து, மதித்துப் போற்றி வரும் ஈழத் தமிழர்களுக் காகக் குரல் எழுப்பி, அவர்தம் துயர் துடைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உண்டு.

ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு தொப்புள் கொடி இணைப்புப் போல தாய் சேய் நேசம் கொண்டது. 'தானாடா விட்டாலும் தசை ஆடும் என்பார்கள்.' அது போல ஈழத் தமிழர்களுக்காக இந்தியா குரல் எழுப்பா விட்டாலும், தமிழகம் குரல் எழுப்பி, உதவ ஓடோடி வரும். வரவேண்டும்.

ஆனால், யதார்த்தத்தில் தெனிலங்கைப் பேரின வாதத்தின் கொடூர அடக்குமுறையில் சிக்கி அவலப் படும் ஈழத் தமிழர்களுக்கு உதவ முன்வராத பாரதம், உபத்திரவம் செய்யத் துடியாய்த் துடிக் கின்றதோ என்ற சந்தேகம் விசனம் தமிழர் மனதில் எழுந்துள்ளது. அதைத் தமிழகம் பார்த்து வாளாவிருப்பது இன்னும் வேதனைக்குரியது.

ஒருபுறம் ஈழத் தமிழர்கள் மீது கொடூர யுத்த வெறிப் போக்கை வெளிப்படுத்தும் கொழும்பு நிர்வாகத்துக்கு ஆயுதத் தளபாடங்களை வாங்கிக் குவிக்க இந்தியா பெருந் தொகைக் கடனுதவி வழங்கி உதவுகின்றது. 'ராடர்' போன்ற கண் காணிப்பு ஆயுதங்களை விநியோகித்து ஒத்து ழைக் கின்றது. படை அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிய ளித்து தமிழர் எதிர்ப்புப் போராட்டத்தில் கொழும் பின் கையை வலுப்படுத்துகின்றது.

அதேசமயம், மறுபுறம் தமிழர் தாயக மண்ணை ஆக்கிரமிக்கும் கொழும்பின் செயற்பாடுகளிலும் இந்தியா நேரடியாகப் பங்களிக்கின்றது என்ற குற்ற ச்சாட்டு இப் போது முன்வைக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் இலங்கை அரசுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் கள் காரணமாக சம்பூர்ப் பிரதேசத் தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கில் இடம் பெயர்ந்தனர். அவர்கள் இப்போது இடைத்தங்கல் முகாம்களில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

பல நூற்றாண்டுகளாக பல தலைமுறை தலைமுறை களாக சம்பூரில் தமிழர்கள் வசித்து வந்தார்கள். வரலாற் றுத் தொன்மையும் தமிழரின் பூர்வீகச் சிறப்பும் மிக்க பூமி அது.

அதனைத் தனது படை ஆக்கிரமிப்பு மூலம் கைப்பற்றிக் கபளீகரம் செய்த தென்னிலங்கை அரசுப் படைகள். சம்பூரையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்து, அப்பிரதேசத்தின் பூர் வீகக் குடிகளான தமிழ் மக்கள் தமது இடங்களுக்குத் திரும்புவதற்கு நிரந்தரத் தடை போட்டுள்ளது.

சம்பூரில் தமிழர் தாயக மண் அரசின் திட்டமிடப் பட்ட சிங்களக் குடியேற்ற மையத்துக்கான இலக்காகும் சூழல் இதனால் உருவாகியிருக் கின்றது. இந்தப் பின்புலத்திலேயே

தமிழரின் பூர்வீகத் தாயக மண்ணான சம்பூருக் குத் தமிழர்கள் இனித் திரும்பவே முடியாத வகையில் ஓர் அரண் அமைக்கும் நோக்கத்தோடு அங்கு அனல் மின் திட்டம் ஒன்றை உருவாக்க கொழும்பு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வளம் கொழிக்கும் தமிழர் தாயகத்திலிருந்து தமிழர் களை விரட்டியடிக்கும் இந்தக் கபட சதித் திட்டத்துக்கு முதுகு கொடுத்து உடந்தையாகும் செயலை இந்தியா முன்னெடுப்பதுதான் கேவலத் திலும் கேவலம்.

ஐம்பது கோடி அமெரிக்க டொலர் செலவில் இத் திட்டத்தை 2012 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்து, பல்லாயிரம் தமிழ்க் குடும்பங்களை சம்பூருக்கு தமது தாயக பூமிக்கு திரும்பி வரவே முடியாத கொடூரத்தை நிறைவேற்றிக் கொடுக்கப் போகிறாள் பாரத அன்னை. இலங்கையில் ஓர் இனப்போர் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐந்து தசாப்த காலமாக நீடித்த இனப்பிரச் சினை கொடூர உள்நாட்டுப் போராக இப்போது விஸ்வ ரூபம் எடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களின் உரிமைகளுக்கான நியாயத்தை யுத்த களத்தில் உரசிப்பார்க்கும் நிலைமை நீடிக்கின்றது.

இந்நிலையில் ஆக்கிரமிப்புக்கும் அடிமைத்தனத் துக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கும் ஒரு சிறுபான்மை இனத்தின் நலிவற்ற சமூகத்தின் தாயக பூமியில் இருந்து அவர்களை விரட்டியடித்து விட்டு உள்ளூர் வளங்களைச் சூறையாடும் விதத்தில் அந்நிய சக்திகள் தலையிடுவது மிக மோச மான, நியாயப்படுத்த முடியாத, கேவல நடவடிக்கையாகும்.

மன்னாரை அண்டி, எண்ணெய் அகழ்வு என்ற பெயரிலும், திருகோணமலை சம்பூரில் அனல் மின்நிலையத் திட்டம் என்ற நாமத்திலும், புல்மோட்டையில் இல் மனைட் கனிவள அகழ்வு என்ற வடிவிலும் இந்த இக் கட்டுச் சமயத்தில் தமிழர் தாயக வளங்களைச் சூறையாடு வதும், அதில் அந்நிய நாடுகளும் சக்திகளும் தலையிடு வதும் 'தவித்த முயல் அடிக்கும்' வேலையாகவும் 'குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும்' காரியமாக வுமே அர்த்தப்படுத்தப்படக் கூடியவை.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் எப்போதுமே முறையற்ற விதத்தில் தலையிட்டு மூக்கறுபட்ட அனுபவத்தை ஏற்கனவே பெற்றுக் கெண்டுள்ள இந்தியா, இன்னும் அப்போக்கி லிருந்து மாறாமல் இருப்பது விசனத்துக்குரியது.

இனி தமிழினம் குனியாது எமை எதிர்த்திட பகை துணியாது

[Editorial, Eelam Nation]

Like Goebbels, for Gotabhaya, truth is sedition

Even Joseph Goebbels, who was the closest associate of Adolf Hitler, would feel uncomfortable in his cold grave to learn that the Sri Lankan defence secretary, Gotabhaya Rajapakse, is being compared to him. Gotabhaya is the closest associate of President Rajapakse, his brother and by virtue of his being the brother believes that he is an integral part of the Sri Lankan state. For Goebbels, who was in charge of Hitler's fascist media machinery with his deep rooted contempt for humanity, truth was the greatest enemy of the state. Goebbels said: "If you tell a lie big enough and keep repeating it, people will eventually come to believe it. The lie can be maintained only for such time as the State can shield the people from the political, economic and/or military consequences of the lie. It thus becomes vitally important for the State to use all of its powers to repress dissent, for the truth is the mortal enemy of the lie, and thus by extension, the truth is the greatest enemy of the State."

Just as much as Hitler used Goebbels to muffle all forms of freedom of expression, Gotabhaya of the Sri Lankan state, has always assumed the role of a petty Goebbels not only when it comes to the matter of the media in relation to the actions of the security forces. Though Gotabahaya is no comparison to the intellectual stature of Goebbels with a penchant for culture and the arts, Gotabhaya with his enthusiasm, would nevertheless have proved an excellent fifteenth in the hierarchy of Goebbels' Nazi staff inside the Third Reich, carrying out orders without question.

On Monday, 26 May 2008, two senior journalists attached to the government owned Lake House group of newspapers, Poddala Jayantha and Sanath Balasooriya also of the Working Journalist Association (WJA) along with their Chairman Bandula Padmakumara were summoned to be reprimanded by the defence secretary. They were, reportedly, threatened that their activities were bringing disrepute to the State armed forces, and that they should not hold the government responsible for any harm arising out of any serious action taken against journalists by patriotic citizens who love military leaders. They were also told that such actions by these patriotic citizens who love military leaders were not wrong and the government would not stop such action. He is said to have further stated: "you will have to face severe consequences if you criticise military leaders". They were not told whether these "patriotic citizens who love military leaders" were from the underworld, members of the security services, or just hired assassins doing a demolition job for a consideration—leaving no room for any negotiation.

The crime for which Jayantha and Balasooriya of the WJA were summoned was not for criticising the military but for criticising the manner in which some "patriotic citizens and those who love the military leaders" had on Friday, May 23rd, dealt with Keith Noyahr the associate editor of the Nation for exposing the misdemeanours of the top brass of the Sri Lankan army in a well researched article captioned: "An army is not its commander's private fiefdom". Mr. Noyahr was abducted, assaulted and tortured for nearly eight hours by masked patriotic citizens and then dropped close to his home. He was not allowed to die for he had to convey an important message to the rest of the journalists. When President Rajapakse had ordered the usual sham inquiry, his brother and defence secretary on the other hand justifies the attack on Noyahr, nullifying the whole melodramatic effect for what it was worth. Gothabahaya's "thinly veiled death threats" are not new. He had earlier threatened the Daily Mirror editor, Champika Liyanaarachchi, with death.

Gotabhaya's statements were pregnant with meaning and should not be dismissed lightly. These threats were not directed only to Jayantha, Balasooriya and Padmakumara. It was a message to the entire journalist fraternity.

Like a devil citing scripture, invoking the archaic Establishment Code the convenient Bible of the Sri Lankan state service, the servile director of the Media Centre for National Security, stated that State employees including Lake House journalists could not criticise government policies no matter what their position was and it could be considered as a grave crime to do so. According to him, therefore, State officers, even in their capacity as trade unionists in a "democracy" cannot express views on crimes against their own constituent members. He mistook government's corruption to be government policy unless he meant that corruption was part of their policy. A Freudian slip!

Meanwhile, shedding crocodile tears was minister Rambukwella who continually thinks that those inhabiting the rest of the world are either imbecile, partially insane or both, has said in relation to Noyahr: "We are trying our level best to conduct this investigation accurately and impartially and we are ready to facilitate him with whatever security he needs. But if he does not support us by at least by giving a statement, we have to do the investigation with the available evidence". In forestalling the outcome of the mock inquiry, he was not only contradicting Gotabhaya he was also betraying the absolute hypocrisy of the Sri Lankan government.

It is time that Sri Lanka stopped claiming that it is a democracy for it is a fascist police state where truth and accuracy are no defence for sedition.

ஒரு பேப்பர் ORU PAPER